நற்பணியே நம் வாழ்வு!
MADURAI SEED

மதுரை சீடு குழந்தைகள் வழங்கும் தனிச்சுற்று இதழ்

# புதுயுகம்

மலர்கின்ற உலகை நற்பணிகளால் காப்போம்

உலகு 4 | பணிமடல் 17 | ஆகஸ்ட்-செப்டம்பர் 2010 | நன்கொடை ரூ. 2

## எங்களுக்கு வேண்டும் உரிமை !

★ 18 வயதை அடையும் வரை அனைவருமே குழந்தைகள் தான் என அங்கீகரிக்கப்படும் உரிமை

★ தரமான, பாதுகாப்பான இருப்பிடத்தை பெறும் உரிமை

★ தரமான மருத்துவ வசதியை பெறும் உரிமை

★ தூய்மையான சுற்றுச்சூழலை பெறும் உரிமை

★ தரமான, சமமான இலவச கல்வியைப் பெறும் உரிமை

★ விளையாடுவதற்கும், விளையாட்டுத் திறனை வளர்ப்பதற்கும் சமவாய்ப்பைப் பெறும் உரிமை

★ மரபார்ந்த கலைகளைக் கற்பதற்கு சம வாய்ப்பைப் பெறும் உரிமை

★ சிறப்பு தேவையுள்ள குழந்தைகளின் முழுமையான வளர்ச்சிக்கான வளங்களை பெறும் உரிமை

★ மூட நம்பிக்கைகளிலிருந்து பாதுகாப்பைப் பெறும் உரிமை

★ குழந்தைத் திருமணத்திலிருந்து பாதுகாப்பைப் பெறும் உரிமை

★ பாலியல் சுரண்டலிலிருந்து பாதுகாப்பைப் பெறும் உரிமை

★ வன்முறை இல்லா பள்ளிக்கூடங்களையும் தோழமையான பள்ளிச் சூழலையும் பெறும் உரிமை

★ குழந்தை உழைப்பு, குழந்தை கடத்தல் போன்றவற்றிலிருந்து பாதுகாப்பைப் பெறும் உரிமை

★ பாகுபாட்டிலிருந்து பாதுகாப்பைப் பெறும் உரிமை

★ அனைத்து விதமான தீங்கு இழைத்தல்களில் இருந்தும் பாதுகாப்பைப் பெறும் உரிமை

★ விரும்பும் மதத்தைத் தேர்ந்தெடுத்து பின்பற்றும் உரிமை

★ குழந்தைகளுக்கான தளங்கள் அமைக்கப்பட்டு அதில் குழந்தைகள் தம் கருத்துகளைக் கூறும் உரிமை

★ குழந்தைகளின் அமைப்புகளால் அங்கீகரிக்கப்படும் உரிமை

★ குழந்தைகளுக்கான சட்டங்களையும், திட்டங்களையும் குழந்தைகளின் பங்கேற்போடு உருவாக்கி செயல்படுத்தும் உரிமை

இவன்
மதுரை சீடு குழந்தை உரிமை இயக்கங்களின் கூட்டமைப்பு

புதுயுகம் தனிச்சுற்று சிற்றிதழ், மதுரை சீடு வழிகாட்டலுடன் மதுரை சீடு குழந்தைகள் பேரவை குழந்தைகளால் வளமைக் கல்வி நோக்கில் வெளியிடப்படுகின்றது

# எமது இயக்க வரலாறு

நண்பர்களே,

"குழந்தைப் பருவம் எங்கள் உரிமை, கூடி உழைத்துப் பெறுவோம் வளமை" என்ற கொள்கை முழுக்கமோடு இயங்கி வரும் எங்கள் இயக்கமே, மதுரை சீடு குழந்தைகள் பேரவை. மதுரையின் நலிவுற்ற பகுதிகளில் ஒன்றான கரும்பாலையை முக்கியப்படுத்தி பணி செய்து வருகின்ற நிறுவனம் தான் மதுரை சீடுசமூகத்தின் ஆணி வேர்களாகிய துப்புரவுத் தொழிலாளர்கள், வீட்டு வேலை செய்யும் பெண்கள், கட்டிட தொழில் புரிவோர் என்று சமூகத்தின் விளிம்பு நிலை மக்கள் வாழும் பகுதிகளில் உள்ள நலிவுற்ற குழந்தைகளின் வாழ்வு, நலன், உரிமைகள் சார்ந்த பணிகளை செய்கின்ற மதுரை சீடு எளிதமைப்பில் கடந்த 2007ஆம் ஆண்டு முதல் மதுரையின் 7 பகுதிகளைச் சேர்ந்த பல்வேறு குழந்தைகள் மன்றங்களை ஒன்றிணைத்து. மதுரை சீடு குழந்தைகள் பேரவை என்ற பேரியக்கமாக பரிணமித்தோம். 2010 ஆம் ஆண்டு ஏப்ரல் முதல் மதுரை சீடு குழந்தை உரிமை இயக்கம் என செயல்பட தொடங்கியுள்ளது.

- குழந்தைகளின் வாழ்வுரிமைகளை வென்றெடுப்பது.
- இயக்க குழந்தைகளை முழுமைத்துவ கல்வியின் ஊடாக வளர்த்தெடுப்பது.
- சமூக பிரக்ஞைகளை தாங்கள் உணர்வது. பிறருக்கும் உணர்த்துவது.
- கல்வி மற்றும் வாழ்வியல் சமூக விழிப்புணர்வுகளை மேம்படுத்திக் கொள்வது.
- பன்முக ஆளுமைகளை வளர்த்துக் கொள்வது.
- சுய முன்னேற்றத் தளங்களில் முயற்சி செய்வது
- சக குழந்தைகளின் நலனுக்காக குரல் கொடுப்பது, பணி செய்வது
- அனைத்து தளங்களிலும் பங்கேற்க உழைப்பது.
- பிற குழந்தைகள் இயக்கங்களோடு இணைந்து பணியாற்றுவது.

மேலும் குழந்தைகள் முன்னேற்றத்திற்கு கூடி சிந்திப்பது, விவாதிப்பது, முடிவெடுப்பது, செயல்படுவது, வெற்றி பெறுவது என்பவை எங்களின் பணி நடைமுறைகளாகும்.

## பங்கேற்பு உரிமைக்கான குழந்தைகள் இயக்கங்களின் கூட்டமைப்பில் MSCF

**2007 ஆம் ஆண்டு முதல் FCMRPயில் MSCF அங்கம் வகிக்கிறது. பாண்டியராஜன், மகுடபதி, முத்துகணேஷ், மூவரும் FCMRPயில் சிறப்பான பணியினை செய்துள்ளனர். மண்டல உறுப்பினர்களாகவும், மாநில செயற்குழுவிலும் பங்கேற்றுள்ளனர். தமிழகத்தில் பல்வேறு பகுதிகளில் நடைபெற்ற மாவட்ட, மாநில குழந்தைகள் கூடுகைளில் பங்கு கொண்டுள்ளனர்.**

**முத்து கணேஷ் 2010–2011 ஆம் ஆண்டு துணை செயலாளர் பொறுப்பினை பெற்றுள்ளார். சென்னை, மதுரை, புதுச்சேரி மாநில மாநாடுகளில் MSCF சிறப்பாக பங்கெடுத்துள்ளது. 2010 – 2011 ஆண்டுக்கான மதுரை மாவட்ட FPCP பொறுப்பையும், எளிதமைப்பு குழு உறுப்பினர் பொறுப்பினையும் பெற்றுள்ளது. மதுரை சீடு குழந்தைகள் சிறு சிறு அமைப்புகளாக மாறி மதுரை சீடு குழந்தைகள் உரிமை இயக்கங்களின் கூட்டமைப்பு என்பதற்காக புத்தெழுப்பியுடன் செயல்பட திட்டமிட்டு வருகின்றனர். இ ன் னு ம் அழுத்தமாக MSCF பங்கேற்பு உரிமைக்கான பணிகளில் சிறப்பான பணியை உங்கள் ஆதரவுடன் என்றும் தொடர்ந்து செய்யும்.**



**நன்றி**

**இவண்**
**மகேஸ்வரி, ராம்கி,**
**விக்னேஸ்வரன், வினோதினி**
**மதுரை சீடு குழந்தை உரிமை இயக்கங்களின் கூட்டமைப்பு**

### உரிமைகளும் – குழந்தைகளும்

அனைத்துத் தளங்களிலும் குழந்தைகளுக்கே முன்னுரிமை அளிக்க வேண்டும். குழந்தைகளின் எல்லா உரிமைகளையும் பாதுகாக்க வேண்டிய முதல் கடமை பெற்றோருக்கு உண்டு. பெற்றோர்களின்பொறுப்புகளையும்,உரிமை களையும் மதிக்க வேண்டிய கடமை அரசுக்கு உண்டு.

குழந்தை உரிமைகள் மீதான உடன்படிக்கை, அதில் கையொப்பமிட்ட உறுப்பு நாடுகளின் கடமைகளையும், பொறுப்புகளையும் வலியுறுத்தும் பன்னாட்டு ஆவணமாகும். குழந்தைகளுக்கு வெகு அருகாமையிலுள்ள பெற்றோர் மற்றும் பாதுகாவலர் நேரடியாக குழந்தைகளின் உரிமைகளை நிலைநிறுத்தும் பொறுப்பில் இருந்தாலும் அந்த பொறுப்புகளை நிறைவேற்றுவதில் அவர்களுக்கு ஆதரவாக செயல்படுவது அந்தந்த நாட்டு அரசுகளின் கடமை என்பதை நினைவில் கொள்ள வேண்டும்.

குழந்தைகளுக்கும் தங்கள் உரிமைகளை நிலைநிறுத்துவதில் கடமைகளும், பொறுப்புகளும் உண்டு. ஆனால் இக்கடமைகள் பெரியவர்களின் கடமைகளுக்கு இணையானதாக அல்லாமல் குழந்தைகளுக்கு ஏற்ற அளவில் மட்டுமே இருக்க வேண்டும். உதாரணமாக பள்ளி செல்வது குழந்தைகளின் கடமை. ஆனால்பள்ளி செல்லத் தேவையான பொருட்களை ஈட்டுவது அவர்களின் கடமையாகாது.

### குழந்தை உரிமைகள் மீதான உடன்படிக்கை உருவான வரலாறு

முதல் உலகப்போருக்குப் பின் பால்கன் அகதிக் குழந்தைகளோடு பணியாற்றியதில் கிடைத்த அனுபவத்தின் அடிப்படையில் குழந்தைகள் பாதுகாப்பு நிதியின் நிறுவனர் எக்லென்டைன் ஜெப் 1923ம் ஆண்டு குழந்தைகளுக்கான ஓர் கோரிக்கை சாசனத்தை உருவாக்கினார்.

1942ல் உருவான ஜெனிவா பிரகடனம், மேற்கூரிய கோரிக்கை சாசனத்தை அடிப்படையாகக் கொண்டு உருவாக்கப்பட்டது. 1959ல் ஐ.நா.சபையின் குழந்தை உரிமை பிரகடனமும், அதனைச் சார்ந்தே அமைந்தது. 1979ல் சர்வதேச குழந்தைகள் ஆண்டு அறிவிக்கப்பட்டதன் வாயிலாக குழந்தைகளின் மேல் சர்வதேச சமூகத்தின் கவனம் திரும்பியது. அதற்கு பின்னர், குழந்தை உரிமைகளுக்கான ஓர் உடன்படிக்கையை உருவாக்கும் ஆலோசனை ஐ.நா. சபையின் மனித உரிமைக் குழுவின்பரிசீலனைக்கு எடுத்து கொள்ளப்பட்டது.

இதன் தொடர்ச்சியாக, பத்தாண்டுகளுக்குப் பின் குழந்தை உரிமைகள் மீதான உடன்படிக்கை 1988 ம் ஆண்டு நவம்பர் 20ம் நாள் ஐ.நா.சபையின் பொதுக்குழுவால் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

இந்த உடன்படிக்கையில் 1992ம் ஆண்டு டிசம்பர் 11ல் இந்தியா கையெழுத்திட்டது. அமெரிக்கா, சோமாலியா தவிர மற்ற அனைத்து நாடுகளும்ஏற்றுகொண்ட ஓர் சாசனம் என்ற பெருமையும் இந்த உடன்படிக்கை பெறுகிறது. இந்த உடன்படிக்கையில் குழந்தைகளின் பல்வேறு உரிமைகளை உள்ளடக்கும் ஓர் பரந்துபட்ட வரைவினை நாம் காணமுடியும். இவ்வுடன்படிக்கையை செயல்படுத்துவதில் நான்கு அடிப்படை வழிகாட்டு நெறிகள் வலியுறுத்தப்பட்டுள்ளது.

- அனைத்து வளங்களிலும் குழந்தைகளுக்கே முதலிடம்
- குழந்தைகளின் மிகச்சிறந்த நலன்
- சமம்
- பாகுபாடின்மை

இதன் அடிப்படையில் சமுதாயத்தின் எல்லாத் தளங்களிலும் குழந்தைகள் நியாயமான பங்கைப் பெறுவதற்கு எல்லா நாடுகளும் உத்திரவாதம் செய்ய வேண்டும்.

### வரலாற்றுப் பின்னணி
### ஐக்கிய நாடுகள் சபையில் மனித உரிமை:

1948, டிசம்பர் 10ம் தேதி, ஐக்கிய நாடுகளின் பொது சபையால் பிரகடனப்படுத்தப்பட்ட மனித உரிமை சாசனம் உலகம் முழுவதும் ஓர் தாக்கத்தை ஏற்படுத்தியது. குறிப்பாக மனித உரிமை கண்ணோட்டத்தில் ஒவ்வொரு நாட்டின் சட்டங்களும், சர்வதேச சட்டங்களும் உருவாக்கப்பட்டன. சில குறிப்பிட்ட உரிமைகளை வலியுறுத்தி சர்வதேச மாநாடுகளும் நடதத்தப்பட்டன.

பொருளாதார, சமூக,கலாச்சார உரிமைகள் பற்றிய சர்வதேச உடன்படிக்கையும், அரசியல் மற்றும் குடிமை உரிமைகள் பற்றிய சர்வதேச உடன்படிக்கையும் உருவாக இது வழி வகுத்தது.

## குழந்தைகள் என்றால் யார் ?

குழந்தை என்ற சொல்லுக்கு பலவிதமான அர்த்தங்கள், விளக்கங்கள் இன்று நம் நாட்டில் கொடுக்கப்பட்டு வருகின்றன. பண்பாட்டுச் சூழலுக்கு ஏற்ப குழந்தைகளின் வயது வெவ்வேறு சமூகத்தால் வெவ்வேறு விதமாக நிர்ணயிக்கப்படுகிறது.

இந்திய மக்கள் தொகை கணக்கு, குழந்தைகள் என்பவர்கள் 14 வயதிற்கு உட்பட்டவர்கள் என்ற விளக்கத்தை அளிக்கின்றது.

நமது இந்திய அரசியலமைப்புச் சட்டம், குழந்தைகள் என்பவர்கள் 14 வயதிற்கு உட்பட்டவர்கள் என்றே விளக்கம் தருகின்றது.

குழந்தை தொழிலாளர் (தடுத்தல் மற்றும் முறைப்படுத்துதல்) சட்டம் குழந்தைகளின் வயதை 14 என்றே கருதுகிறது.

சமீபத்தில் நடைமுறைக்கு கொண்டு வரப்பட்டுள்ள சிறார் நீதி (பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு சட்டம் 2000 மற்றும் சட்டத்திருத்தம் 2006) குழந்தைகள் என்பவர்கள் 18 வயதிற்கு உட்பட்டவர்கள் என்ற விளக்கத்தைத் தருகின்றது.

குழந்தை உரிமைகள் மீதான உடன்படிக்கை சமூக அறிஞர்கள், உளவியல் நிபுணர்கள், குழந்தை உரிமை செயல்பாட்டாளர்கள் பேன்றோர் இணைந்து மேற்கொண்ட ஆய்வுகளின் அடிப்படையில் 18 வயது நிறைவடையும் வரை அனைவருமே குழந்தைகள் தான் என்று மிகத்தெளிவாக வரையறுத்துள்ளது.

குழந்தைகளின் உரிமைகள் ஒன்றோடொன்று பின்னிப்பிணைந்தவை. பிரிக்க முடியாதவை. ஆனாலும் நமது எளிய புரிதலுக்காக குழந்தைகளின் உரிமைகளை கீழ்கண்டவாறு நான்காக வகைப்படுத்துகிறோம்.

**உரிமைச்சட்டம்**

| உயிர் வாழ்வதற்கான உரிமை | முன்னேற்றத்திற்கான உரிமை |
|---|---|
| உயிருக்கான உரிமை<br>தாயின் வயிற்றிலிருக்கும் போது பராமரிப்பு<br>சத்தான உணவு<br>சுத்தமான காற்று<br>சுத்தமான குடிநீர்<br>இருப்பிடம்<br>சுகாதாரமான சுற்றுச்சூழல்<br>உயர்ந்த பட்ச தரமான உடல்நலம்<br>பெயர் வைத்துக் கொள்ள உரிமை<br>குடியுரிமை | கல்விக்கான உரிமை<br>குழந்தைப் பருவ வளர்ச்சிக்கான உரிமை<br>குழந்தை பராமரிப்பிற்கான உரிமை<br>சமூக பாதுகாப்பிற்கான உரிமை<br>விளையாட்டு<br>பொழுதுபோக்கு<br>ஓய்வு<br>கலை மற்றும் பண்பாடு |
| **பாதுகாப்பிற்கான உரிமை** | **பங்கேற்பதற்கான உரிமை** |
| சுரண்டல்களிலிருந்து பாதுகாப்பு<br>தீங்கிழைத்தல்களிலிருந்து பாதுகாப்பு<br>உடல் ரீதியான தீங்கிழைத்தல்<br>மன ரீதியான தீங்கிழைத்தல்<br>பாலியல் ரீதியான தீங்கிழைத்தல்<br>புறக்கணித்தல்<br>பாகுபாடுகளிலிருந்து பாதுகாப்பு<br>பாலினப் பாகுபாடு<br>சாதியப் பாகுபாடு<br>மத அடிப்படையிலான பாகுபாடு<br>கடத்தப்படுவதிலிருந்து பாதுகாப்பு<br>பேரிடர்களிலிருந்து பாதுகாப்பு<br>வன்முறைகளிலிருந்து பாதுகாப்பு | கருத்துகளை வெளிப்படுத்த உரிமை<br>கருத்துகள் கேட்கப்படும் உரிமை<br>தகவல் பெறும் உரிமை<br>குழுவாக இணைவதற்கான உரிமை<br>விரும்பிய மதத்தைத் தேர்ந்தெடுக்கும், பின்பற்றும் உரிமை<br>மொழி உரிமை<br>தன் பாண்பாட்டை பின்பற்றும் உரிமை<br>தன் நிலை குறித்து வாதாடும் உரிமை<br>முடிவெடுத்தலில் பங்கேற்கும் உரிமை |

## குழந்தைகளுக்கு எதிரான தீங்கிழைத்தல் – இந்தியா 2007

5 வயதுமுதல் 12 வயது வரை உள்ள குழந்தைகள் மற்ற வயது குழந்தைகளை விட அதிக அளவில் தீங்கிழைத்தலுக்குள்ளாகிறார்கள்.

ஆண் குழந்தைகளும், பெண் குழந்தைகளும் தீங்கிழைத்துலுக்குள்ளாகும் அபாயத்தில் சமநிலை வகிக்கின்றனர்.

குழந்தைகளுக்கு நம்பிக்கையானவர்களும், அதிகாரத்தில் உள்ளவர்களுமே தீங்கிழைத்தலில் அதிகமாக ஈடுபடுகின்றனர்.

பாதிக்கப்பட்ட 70% குழந்தைகள் தங்களுக்கு நேர்ந்ததை யாரிடமும் கூறுவதில்லை.

**உடல் ரீதியான தீங்கிழைத்தல் :**

தீங்கிழைத்தலுக்குள்ளான மூன்று குழந்தைகளில் இரண்டு குழந்தைகள் (69%) உடல் ரீதியான தீங்ழைத்தலுக்கு உள்ளாகியிருக்கின்றனர். இதில் 54.68% ஆண் குழந்தைகள்

கணக்கெடுக்கப்பட்ட 13 மாநிலங்களில் 50% குழந்தைகள் உடல் ரீதியான தீங்கிழைத்தலுக்கு உள்ளாகியிருக்கின்றனர்.

88.6% குழந்தைகள் பெற்றோர்களால் உடல்ரீதியான தீங்கிழைத்தலுக்கு உள்ளாகியிருக்கின்றனர்.

பள்ளிக்கு செல்லக்கூடிய குழந்தைகளில் 65% குழந்தைகள் தண்டனைக்குள்ளாகி உள்ளனர்.

ஆந்திர பிரதேசம், அஸ்ஸாம், பீகார், டில்லி ஆகிய மாநிலங்களில் உள்ள குழந்தைகள் அதிகமாக தீங்கிழைத்தலுக்கு உள்ளாகியிருக்கின்றனர்.

50.2% குழந்தைகள் வாரத்திற்கு 7 நாள் வேலை செய்கிறார்கள்.

**மனரீதியான பாதிப்பு :**

தீங்கிழைத்தலுக்குள்ளான இரண்டு குழந்தைகளில் ஒரு குழந்தை மன ரீதியான தீங்கிழைத்தலுக்கு உள்ளாகிறது.

பெற்றோர்களால் 83% குழந்தைகள் மனரீதியான தீங்கிழைத்தலுக்கு உள்ளாகியிருக்கின்றனர்.

**பாலியல் ரீதியான பாதிப்பு :**

53.22% குழந்தைகள் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட பலவகையான பாலியல் தீங்குகளை சந்திக்கின்றனர்.

## தீங்கிழைத்தல்களிலிருந்து பாதுகாப்பு பெற குழந்தைள் செய்ய வேண்டியவை

- தனிமையை தவிர்த்தல்
- வெளி இடங்களுக்குச் செல்லும் போது தக்க பாதுகாப்புடன் செல்லுதல்
- தவறான தொடுதல்களை ஒரு போதும் அனுமதிக்காதிருத்தல்
- நட்பில், பழகுதலில் எல்லை வகுத்தல்
- தீங்கிழைத்தல் நேரிடும் சூழலின் போது கூச்சல் போடுதல் மற்றும் உதவி கோரி உரத்த சத்தம் எழுப்புதல்

- ❀ அந்த இடத்தை விட்டும், தீங்கிழைக்கும் நபரை விட்டும் விலகி ஓடி பாதுகாப்பான இடத்திற்கு செல்லுதல்
- ❀ தனக்கு நம்பிக்கையானவர்களிடம் தனக்கு நேர்ந்ததை உடனடியாக பகிர்ந்து கொண்டு உதவி பெறுதல்
- ❀ தீங்கிழைத்தலில் ஈடுபட்ட நபர் மீது உரிய ஆதாரங்களுடன் சட்ட நடிவடிக்கை மேற்கொள்ளுதல்
- ❀ குழந்தைகள் பாதுகாப்பிற்காக இயங்கும் கீழ்காணும் தொலைபேசி எண்களை தொடர்பு கொள்ளுதல் சைல்டு லைன் 1098, ஹெல்ப் லைன் 1091

## பாதுகாப்பிற்கான சட்டங்களும், குழந்தைகளும்

சமூகத்தில் குழந்தைகள்தான் அதிக அளவில் அனைத்து வகை சுரண்டல்களுக்கும் உள்ளாகின்றனர். எளிதில் தவறான பயன்படுத்தலுக்கு உள்ளாகக்கூடிய பிரிவினர் என்பதை அரசியலமைப்பாளர்கள் உணர்ந்து குழந்தைகளுக்கென சிறப்பு உரிமைகளை அரசியலமைப்பு சட்டத்தில் உறுதிபடுத்தியுள்ளார்கள்.

***அடிப்படை உரிமைகள் :***

✯ உறுப்பு.14% சட்டத்தின் முன் அனைவரும் சமம் என்பதை உறுதி செய்கிறது.

✯ உறுப்பு.12(3)% சட்டத்தின் மூலம் குழந்தைகளுக்கும், பெண்களுக்கும் சிறப்பான வழிவகைகளை ஏற்படுத்த அரசை அனுமதிக்கின்றது.

✯ உறுப்பு.21% மாண்புடன் உயிர் வாழ்வதற்கான உரிமையை உறுதி செய்கின்றது.

✯ உறுப்பு:21%6 வயதிலிருந்து 14 வயதிற்குட்பட்ட குழந்தைகளுக்கு இலவச கட்டாயக் கல்வியை அரசு வழங்க வேண்டும் என்று வலியுறுத்துகின்றது.

✯ உறுப்பு: 23% மனிதர்களை வணிகப்பொருளாக்குதல் மற்றும் கட்டாயப்படுத்தப்பட்ட உழைப்பைத் தடை செய்கின்றது.

✯ உறுப்பு: 24/14 வயதிற்குட்பட்ட குழந்தைகளை அபாயகரமான மற்றும் கெடுதல் விளைவிக்கக்கூடிய தொழில்களில் ஈடுபடுத்துவதை தடை செய்கிறது.

***வழிகாட்டு நெறிகள்:***

✯ உறுப்பு: 39 % குழந்தைகளின் இளம்பருவத்தை தவறாகப் பயன்படுத்தக் கூடாது.

✯ உறுப்பு: 39% குழந்தைகளுக்கு ஆரோக்கியமான மற்றும் சுதந்திரமும் கண்ணியமும் நிறைந்த சூழ்நிலைகளில் முன்னேற்றம் அடைவதற்கான வாய்ப்புகளையும், வசதிகளையும் அரசு உருவாக்க வேண்டும்.

✯ உறுப்பு:41% கல்வி பெறுவதற்கான உரிமையை உறுதிப்படுத்த வேண்டும்

✯ உறுப்பு:4%5%6 வயது வரை ஆரம்ப குழந்தைப்பருவ கவனிப்பும், கல்வியும் வழங்க அரசு உறுதி செய்ய வேண்டும்.

✯ உறுப்பு: 51% 14 வயதிற்குட்பட்ட குழந்தைகளுக்கு கல்விக்கான வாய்ப்பை வழங்குவது பெற்றோரின்/பாதுகாவலரின் கடமை என வலியுறுத்துகின்றது.

இந்திய அரசியல் சாசனமே இந்தியாவில் உருவாக்கப்படும் அனைத்துச் சட்டங்களின் ஊற்றுக்கண்ணாக விளங்குகிறது. இந்தியாவில் குழந்தைகளின் பாதுகாப்பு மற்றும் வளர்ச்சியை கருத்தில் கொண்டு பல்வேறு சட்டங்கள் உருவாக்கப்பட்டுள்ளன.

## ------குழந்தைகள் பாதுகாப்பிற்கான தேசியச்சட்டங்கள்------

- **குழந்தை தொழிலாளர் முறை (ஒழிப்பு மற்றும் ஒழுங்குபடுத்துதல்) சட்டம்,1986**
- **குழந்தை உழைப்பை அடகுவைத்தல் சட்டம் 1933**
- **கனிம சுரங்கங்கள் சட்டம், 1952 (திருத்தச் சட்டம்,1983)**
- **தொழிற்சாலைகள் சட்டம் 1948**
- **தோட்டத் தொழிலாளர்கள் சட்டம், 1951**
- **மோட்டார் போக்குவரத்து தொழிலாளர்கள் சட்டம் 1961**
- **தொழிற்பழகுநர் சட்டம்,1961**
- **ஊனமுற்றோர் (சமவாய்ப்பு, உரிமைப்பாதுகாப்பு மற்றும் முழுமையான பங்கேற்பு) 1995**
- **பீடி, சிகரெட் தொழிலாளர்கள் (வேலை நிபந்தனைகள்) சட்டம் 1966**
- **கடைகள் மற்றும் நிறுவனங்கள் சட்டம் 1961**
- **கொத்தடிமைத் தொழில் (ஒழிப்பு) சட்டம் 1976**
- **குறைந்தபட்ச கூலி சட்டம், 1948**
- **மனித உடல் மீதான வியாபாரத்தை தடை செய்யும் சட்டம் 1986**

1956ஆம் ஆண்டு பெண்கள் மற்றும் சிறுமிகளின் உடலை வணிகமாக்குவதை தடுக்கும் சட்டம் இயற்றப்பட்டது. பின்பு சிறுவர்களும் இத்தொழிலில்பயன்படுத்தப்படுகின்றார்கள் என்பதை உணர்ந்து மனித உடல் மீதான வியாபாரத்தைத் தடை செய்யும் சட்டம் 1986ல் இயற்றப்பட்டது.

பிரிவு 4% குழந்தைகளை இத்தொழிலில் ஈடுபடுத்தி இதன்மூலம் ஈட்டும் வருமானத்தில் தன் வாழ்க்கையை நடத்துவது 7 ஆண்டு முதல் 10 ஆண்டு வரை சிறை தண்டனை விதிக்கக்கூடிய குற்றம்.

பிரிவு 5%14 வயதிற்குட்பட்ட குழந்தைள் மற்றும் மைனர் குழந்தைகளை இத்தொழிலை மேற்கொள்ளக் கட்டாயப்படுத்தி அழைத்து வருதல், தூண்டுதல் தொழிலில் ஈடுபடுத்துதல், இடம் மாற்றுதல் ஆகிய குற்றத்திற்கு 7 ஆண்டு முதல் ஆயுள் தண்டனை வரை தண்டனை வழங்கப்படும்.

பிரிவு 6: பாலியல் தொழில் நடக்கும் இடத்தில் குழந்தைகள் கண்டுபிடிக்கப்பட்டு மருத்துவ பரிசோதனையில் அவர்கள் பாலியில் உறவுக்கு உட்படுத்தப்பட்டதாக அறியப்பட்டால் அக்குழந்தைகள் பாலியல் தொழிலுக்காகவே அடைத்து வைக்கப்பட்டார்கள் என்றும் வணிக ரீதியாக பாலியல் சுரண்டலுக்கு உள்ளாக்கப்பட்டுள்ளார்கள் என்றும் அனுமானிக்கப்பட வேண்டும்.

பிரிவு: 21% இத்தொழிலிருந்து மீட்கப்படும் குழந்தைகளுக்காக சீர்திருத்த மற்றும் பாதுகாப்பு இல்லங்களை மாநில அரசு ஏற்படுத்த வேண்டும்.

- **இளஞ்சிறார் நீதி (கவனிப்பு மற்றும் பாதுகாப்பு) சட்டம், 2000**
- **இச்சட்டத்தின் கீழ் சட்டத்திற்கு முரண்பட்ட குழந்தைகளும்,**
- **போதிய கவனிப்பும், பாதுகாப்பும் தேவைப்படும்**
- **குழந்தைகளும் பாதுகாப்புப் பெறுகிறார்கள்.**

குழந்தைகள் பாதுகாப்பிற்கான ஏனைய சட்டங்கள் :

- **பாதுகாப்பாளர் மற்றும் கண்காணிப்பாளர் சட்டம் 1890**
- **இந்து தத்தெடுத்தல் மற்றும் பராமரிப்புச் சட்டம் 1950**
- **பம்பாய் பிச்சையெடுப்பு தடைச்சட்டம் 1959**
- **ஆதரவற்றோர் இல்லங்கள் மற்றும் ஏனைய கருணை இல்லங்கள் (கண்காணித்தல் மற்றும் கட்டுப்படுத்துதல்) சட்டம் 1959**
- **சட்ட விரோதமான போதை பொருள் மற்றும் மனபாதிப்பை ஏற்படுத்தும் பொருட்கள் கடத்தல் தடைச்சட்டம் 1987.**
- **குழந்தைகளுக்கான மாற்றுப்பால், உணவூட்டும் புட்டிகள் மற்றும் குழந்தை உணவுகள் (உற்பத்தி விற்பனை மற்றும் விநியோகத்தை ஒழுங்குபடுத்தல்) சட்டம்,**
- **மருத்துவரீதியிலான கருக்கலைப்பு சட்டம் 1976**
- **பாலின தெரிவு செய்வதை தடை செய்யும் சட்டம், 2000**
- **குழந்தை திருமண தடைச் சட்டம் 2006**

## 1. குழந்தைகளின் சட்டத் திட்டங்களின் நிலை

குழந்தைகளின் நலனை காப்பதற்கு உருவான சட்டங்கள் பலவீனமாக உள்ளன. மேலும் சட்டங்கள் என்பது குற்றங்களையும் தவறுகளையும் துடைப்பதற்காகவே இயற்றப்படுகின்றன. ஆனால் சட்டம் வந்த பின்பும் தவறு நடக்கிறது. மேலும் சில சட்டங்கள் பலமாக இருந்தாலும் அவற்றின் நடவடிக்கைகள் பலமற்றதாக காணப்படுகின்றன.

### பாலியல் தடுப்புச் சட்டம் – 1986

குழந்தைத் தொழிலாளர் ஒழிப்பு சட்டம் –1986

இச்சட்டங்கள் வந்த பிறகும் பாலியல் கொடுமைகள், குழந்தைத் தொழிலாளர் முறை தற்போதும் பல்வேறு இடங்களில் அரங்கேறி வருகின்றன. மேலும் தற்போது குழந்தைத் தொழிலாளர் முறையை ஒழிப்பதற்கு நமது அரசு 3 மாதத்திற்கு முன்னர் ஒரு சட்டம் பிறப்பித்தது. அப்போது இச்சட்டம் அதிகாரத் தன்மையோடு இருந்தது. தற்போது இல்லை. ஆகவே சட்டம் பலமாகவும், அதிகாரத் தன்மையுடனும் இருக்கவேண்டும். இனிவரும் சட்டங்களும் பழைய சட்டங்களும் அதிகாரத் தன்மையுடன் குழந்தைகள் நலனை காப்பதாக இருக்க வேண்டும்

## 2. குழந்தைகளின் மீதான வன்முறைகள்

குழந்தைகளின் மீது தற்போது பல வன்முறைகள் நடக்கின்றன. இவற்றில் முக்கியமாக 1. பாலியல் ரீதியாக குழந்தைகளின் மீதான வன்முறை 2.குழந்தைத் தொழிலாளர் வன்முறையும் அதிகமாக நடக்கின்றன.

### பாலியல் வன்முறை:–

பெண் குழந்தைகளை இவற்றில் ஈடுபட வைத்து இவர்களின் உரிமைகளை பறித்து வதைக்கின்றனர். மேலும் பெண் குழந்தைகள் மட்டுமல்லாமல் ஆண் குழந்தைகளையும் ஈடுபட வைத்து உடல் மற்றும் மனதளவிலும் பாதிப்பை ஏற்படுத்துகின்றனர்.


### குழந்தைத் தொழிலாளர் வன்முறை :–

குழந்தைகளை தொழிலில் ஈடுபட வைப்பதே வன்முறை. மேலும் அவர்கள் வேலை செய்யாவிடில் அவர்களை அடிப்பது, வதைப்பது, சித்ரவதை, செய்வது ஆகியன வன்முறையாகும். ஆகவே இம்மாதிரியான வன்முறைகளை நீக்குதல் வேண்டும். இவ்வகையான வன்முறைகளை தடுக்க கடுமையான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

## 3. குழந்தைகள் வயது

குழந்தைகளின் வயதை 0–18 என அறிவிக்க வேண்டும். ஏனெனில் பல சட்டங்கள் 18 எனவும் சில சட்டங்கள் வேறு மாதிரியாகவும் வயது நிர்ணயித்துள்ளது.

| | | |
|---|---|---|
| இளம் சிறார் சட்டம் | – | வயது 18 |
| ஐ.நா.சபை | – | வயது 18 |
| யுனிசெஃப் | – | வயது 18 |
| பாலியல் தடுப்புச்சட்டம் | – | வயது 18 |
| நமது அரசு | – | 6 முதல் 14 |



நமது அரசினுடைய குழந்தைகள் வயது நிர்ணயம்6 முதல் 14 வயதாகும். ஒரு குழந்தை 10ம் வகுப்பு படிக்கும் பொழுது அவருடைய வயது 15ஆக இருக்கும் அப்படி இருக்கும் பட்சத்தில் 10ம் வகுப்பு படிக்கும் குழந்தைகளை வேலையில் அமர்த்தலாம் என்று மறைமுகமாகக் கூறுகிறது. எனவே 18 வயது என சட்டம் பிறப்பித்தால் அனைத்துக் குழந்தைகளும் மேல்நிலைக் கல்வி வரை கற்பர். எனவே இச்சட்டம் கட்டாயமாக உருவாக வேண்டும். குழந்தைகளின் வயது 0-18 என சட்டமாக்கப்பட வேண்டும்

## 4. குழந்தைகளின் மீதான மீடியாவின் தாக்கம்

முக்கியமான செய்திகளை அனைவருக்கும் தெரியவைப்பதே மீடியாவின் வேலை. ஆனால் இவர்கள் குழந்தைகளுக்கு ஏதாவது பிரச்சனை என்றால் அச்செய்தியை மிகச் சிறிய செய்தியாக மக்கள் படிக்காத இடத்தில் வெளியிடுகின்றனர். ஆனால் ஒரு திரைப்படமோ அல்லது விளம்பரமோ அதிகம் பணம் அளிப்பதால் அதனை முன்பக்கத்தில் பெரிய அளவில் வெளியிடுகின்றனர். எனவே மீடியா இதனைத் தவிர்க்க வேண்டும். மீடியா நினைத்தால் குழந்தைகளின் பிரச்சனைகளைத் தீர்க்க முடியும்

## 5.குழந்தைகளின் கல்வி உரிமை :

குழந்தைகள் கட்டாயக் கல்வி கற்க வேண்டுமென சட்டம் 21ஏ கூறுகிறது. இக்கல்வியானது அனைவருக்கும் பயனுள்ளதாகவும் அறிவை வளர்ப்பதாகவும் செய்முறைத் திறனை உருவாக்குவதாகவும் இருத்தல் வேண்டும். மேலும் எவ்வித பாகுபாடின்றி தரமான, சமமான இலவச கட்டாய கல்வி கிடைக்க வேண்டும் என்று கூறப்பட்டுள்ளது. கல்விக்கு நமது அரசு குறைந்த நிதி ஒதுக்கீடு செய்யாமல் அதிக அளவு நிதி ஒதுக்குதல் வேண்டும். பள்ளிக் கல்வி மகிழ்ச்சி அளிப்பதாக இருக்க வேண்டும். இடைநிற்றலைத் தவிர்க்க அரசு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். ஏனெனில் தற்போது இடைநிற்றல் அதிகரித்து வருகிறது. அதாவது 15 லட்சத்திற்கும் மேற்பட்டோர் தொடக்கக் கல்வியை கற்கின்றனர். ஆனால் 10ம் வகுப்பிற்கு வரும்போது 6 லட்சமாக இருக்கிறது. மேலும் 12ம் வகுப்பு 3 லட்சம் ஆக குறைந்து வருகிறது. இதற்கான காரணங்கள் பற்றியும் பிரச்சினைகள் பற்றியும் அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் கல்வி உரிமையாக்கப்பட்டு இடை நிற்றலைத் தடுக்க வழிவகை செய்ய வேண்டும்


## 6.குழந்தைத் தொழிலாளர்கள் முறையைத் தடுத்தல்

இந்தியாவில் நாளுக்கு நாள் குழந்தைத் தொழிலாளர்கள் அதிகரித்து வருகின்றனர் 1998 - 1993 வரை எடுக்கப்பட்ட ஒரு கணக்கெடுப்பில் குழந்தைத் தொழிலாளர்கள் இந்திய அளவில் 12, 32, 500 என கண்டுபிடிக்கப்பட்டது. இவற்றில் 6,122 மட்டும் ஆதாரத்துடன் நிரூபிக்கப்பட்டது. ஆனால் தண்டனைகள் 1,054 வரை மட்டுமே அளிக்கப்பட்டுள்ளன. ஆதலால் சட்டம் கடுமையானதாகவும் இருக்க வேண்டும். குழந்தைத் தொழிலாளர்கள் முறையை ஒழிக்க கடுமையான சட்டம் கொண்டு வர வேண்டும்.

## 7. பெண் கல்வி

பெண் குழந்தைகளுக்கு பல்வேறு பிரச்சனைகளால் கல்வி மறுக்கப்படுகிறது. அவர்களுக்கு அடிப்படை உரிமைகள் மறுக்கப்படுகின்றன. மேலும் அவர்களுடைய பெற்றோர்களின் வற்புறுத்தலால் இளம் வயதிலேயே திருமணம் செய்து கொள்கின்றனர். இது மட்டுமின்றி பெண்கள் பருவமடைந்து விட்டால் சிலர் அப்பெண் குழந்தைகளை பள்ளிக்கு அனுப்ப மறுக்கின்றனர். இதனால் இடைநிற்றல் அதிகரித்து வருகிறது. இதைத் தடுக்க வேண்டும் இளவயது திருமணத்தைத் தடுக்க கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும்

(இவ்விதழில் வெளியான கட்டுரைகள் பங்கேற்பு உரிமைக்கான குழந்தைகள் கூட்டமைப்பின் செய்தி மடல்களிலிருந்து எடுத்தாளப்பட்டது



தினமலர்

மதுரை ▪ திங்கள் ஆகஸ்ட் 16 2010

மதுரையில் சுதந்திர தினவிழா கோலாகலம்

சீடு அலுவலகத்தில் நிர்வாக அறங்காவலர் கார்த்திக்பாரதி தலைமையில், இயக்குநர் மன்சூர்அலி கொடியேற்றினார். விசுவாசபுரியில்



தினமணி

புதன்கிழமை, 18 ஆகஸ்ட், 2010

பல்வேறு அமைப்புகள் சார்பில் சுதந்திர தின விழா

மதுரை, ஆக. 17: மதுரையில் பல்வேறு அமைப்புகள் சார்பில் சுதந்திர தின விழா ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

தமிழ்நாடு தொழில், வர்த்தக சங்கத்தில், அதன் தலைவர் என்.ஜெகதீசன் தேசியக் கொடி ஏற்றினார். நிகழ்ச்சியில் செயலாளர் ஜே.ராஜ்மோகன், துணைத் தலைவர் வி.சி. ராம்தாஸ், பொருளாளர் பிரபாகரன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

சீடு அலுவலகத்தில் நிர்வாக அறங்காவலர் ஏ.எஸ். கார்த்திக்பாரதி தலைமை வகித்தார். இயக்குநர் எம். மன்சூர்அலி தேசியக் கொடியேற்றி சிறப்புரை வழங்கினார்.

செந்தாமரை கலை, அறிவியல் கல்லூ ஜி.மாரீஸ்குமார் வரவேற்றார். செயற்குழு உறுப்பினர் வி.எம். ராமசாமி தேசிய கொடியேற்றினார். கட்டுரை, கவிதை, பேச்சுப்போட்டி, தனிநடனம் உள்ளிட்ட பல்வேறு போட்டிகள் நடைபெற்றன.

சரஸ்வதி நாராயணன் கல்லூரியில் விழாவுக்கு முதல்வர் கண்ணன் தலைமை வகித்தார். மாவட்ட காந்தி சேனைத் தலைவர் தனுஷ்கோடி ராமசாமி தேசியக் கொடியேற்றினார்.

வடமலையான் இன்ஸ்டியூட்டில் பாராமெடிக்கல் அறிவியல் கல்லூரியில் நடைபெற்ற விழாவில் மருத்துவமனையின் குடல் இரைப்பை சிறப்பு மருத்துவ ஆலோசகர் டாக்டர் லெ. தாயுமானவன் தேசியக் கொடியேற்றி

யில் நடைபெற்ற விழாவுக்கு தாளா ளர் ஏ.கே. ராமமூர்த்தி தலைமை வகி தார். வருமான வரித்துறை முன்னா இணை ஆணையர் மோகன்காந் தேசியக் கொடியேற்றி அணிவகுப் மரியாதையை ஏற்றார்.

எஸ்.பி.ஜே. மெட்ரிக் பள்ளியி நடைபெற்ற விழாவை, தாளா பி.அபர்ணா தொடங்கி வைத்தா காவல்துறை நுண்ணறிவுப் பிரிவு உத ஆணையாளர் எஸ்.குமாரவேல் தே யக் கொடியேற்றி வைத்தார்.

விளையாட்டுப் போட்டிகளில் வெ மாணவர்களுக்கு பரிசுகள் வழங்கப் டன.

ஆண்டார்கொட்டாரம் ஊராட்சி ஒ றிய நடுநிலைப் பள்ளியில் நடந்த வி

# கிராம சபையில் குழந்தைகள் பங்கேற்பு

**குழந்தைகளுக்கான கிராம சபையை உருவாக்குதல் :**

குழந்தைகள் பஞ்சாயத்தை உருவாக்குதல்
பெரியவர்கள் பஞ்சாயத்தில், குழந்தைகளின் பஞ்சாயத்துப் பிரதிநிதிகள் பங்கேற்றல்

**குழந்தைகள் கிராமசபையில் பங்கேற்பதற்கானக் காரணங்கள் :**

குழந்தைகளின் பிரச்சனைகளை முன் வைக்கவும் அவர்களுடைய பங்கேற்பை நிலைநாட்டவும் ஒரு தளம் வேண்டும்.
கிராமசபை மூலம் குழந்தைகளின் கருத்துக்கள் மதிக்கப்படும் மற்றும் குழந்தைகளின் தேவைகள் விரைவாக பூர்த்தி செய்யப்படும்.
குழந்தை உரிமைகள்பரவலாக்கப்படும், பாதுகாக்கப்படும்
குழந்தைகளுக்காக போடப்படும் திட்டங்களில் குழந்தைகளின் பங்கேற்பு உறுதி செய்யப்படும்.
குழந்தைகளின் திறமைகள் வெளிப்படுத்தப்படும் / வாழ்க்கை தரம்1 மேம்படுத்தப்படும்
குழந்தைகளுக்கு எதிரான வன்முறைகள் மற்றும் அடக்கு முறைகளை களையப்படும்

பங்கேற்பு உரிமைக்கான குழந்தைகள்
இயக்கங்களின் கூட்டமைப்பு
தமிழகம் மற்றும் புதுச்சேரி

**FCMRP**

**FCMRP கூட்டமைப்பின் நோக்கம்**

தமிழகம் மற்றும் புதுவையிலுள்ள அனைத்து குழந்தைகளுக்கும் பள்ளி, சமுதாயம், குடும்பம் அரசு அமைப்பு உள்ளிட்ட அனைத்து இடங்களிலும் பங்கேற்பினை உறுதி செய்தல்

**FCMRP கூட்டமைப்பின் குறிக்கோள்**

தமிழகம் மற்றும் புதுவையிலுள்ள அனைத்து குழந்தைகள் இயக்கங்களை ஒன்றிணைத்து கூட்டமைப்பை வலுப்படுத்துவது. அதற்கான திறன் வளர்ப்பது.
சமூகத்திலுள்ள அனைத்து தரப்பினர்க்கும் பள்ளி, சமுதாயம் குடும்பம் அரசு அமைப்பு குழந்தை உரிமையை தெரியப்படுத்தி குழந்தைகளின் கருத்துக்களுக்கு மதிப்பளிக்கச் செய்தல்.

**FCMRP குழுந்தைகள் பங்கேற்பின் வரையறை**

குழந்தைகள் சம்மந்தப்பட்ட விஷயங்களில் குழுவாகவோ, தனியாகவோ, பெரியவர்களின் வழி காட்டுதலோடு முடிவெடுத்து திட்டமிட்டு செயல்படுத்தி மதிப்பீடு செய்தலே குழந்தைகள் பங்கேற்பு

**FCMRP அறிமுகம்**

தமிழகம் மற்றும் புதுச்சேரியில் உள்ள குழந்தைகளுடன் பணியாற்றும் அமைப்புகள் ஒன்றிணைந்து குழந்தை பங்கேற்பைஉறுதி செய்யும் கூட்டமைப்பு 2008ல் உருவானது தனது முதல் செயல்பாடாக தமிழ்நாடு மற்றும் புதுச்சேரியிலுள்ள குழந்தைகள் அமைப்புகளை ஒன்றிணைத்து வடக்கு மற்றும் தெற்கு மண்டல அளவிலும் மாநில அளவிலும் கலந்தாய்வு நிகழ்த்தியது. இதன் வெளிப்பாடாக பங்கேற்பு உரிமைக்கான குழந்தைகள் இயக்கங்களின் கூட்டமைப்பு நவம்பர் 2006ல் உருப்பெற்றது. 19 மாவட்டங்களிலிருந்து 114 குழந்தைகள் அமைப்புகளை உறுப்பினர்களாகக் கொண்ட இந்த கூட்டமைப்பானது குழந்தைகள் தங்கள் பங்கேற்பு உரிமையை செயல்படுத்த வாய்ப்புகளை உருவாக்கியுள்ளது.

**FCMRP**

நிர்வாக உறுப்பினர்கள்
தலைவர் - செல்வன். மோகன்ராஜ் கோவை
துணைதலைவர் - செல்வி. பி.ரேகா
செயலளார் : செல்வி. எம்.இந்துமதி
துணை செயலளார் : செல்வன்.எஸ்.முத்துகணேஷ்
சீடு ட்ரஸ்ட் - மதுரை
பொருளாளர் - ஆர்.ராபின்
அருணோதயா - திருவள்ளூர்
துணை பொருளாளர் - எஸ்.சுபத்ரா புதுக்கோட்டை

**FCMRP**
**நோக்கங்கள்**

அனைத்து தளங்களிலும் உரிமைகளை மையப்படுத்தி குழந்தைகள் பங்கேற்பை உறுதி செய்தல்
பாலின சமத்துவம், மாற்றுத் திறனுடைய குழந்தைகள்
தலித் சிறுபான்மையினர் மற்றும் பழங்குடியினருக்கான பங்கேற்பை உறுதி செய்தல்
குழந்தைகள் பங்கேற்பை மையமாக வைத்து சட்டங்களை இயற்ற செய்தல்.
தமிழகம் மற்றும் புதுவையில் குழந்தைகள் பங்கேற்பிற்கான தளத்தை அமைத்தல்

**FCMRP**
**தொலைநோக்கு**

தமிழ்நாடு மற்றும் புதுச்சேரியிலுள்ள குழந்தைகள் அமைப்புகள் உரிமைப் பார்வையில் ஜனநாயக முறையில் சம வாய்ப்புகளின் அடிப்படையில் அமைப்பாக உருவாகி தங்களது எண்ணங்கள் தங்கள் வாழ்க்கை சமுதாயம் குறித்த முடிவுகளை எடுத்து செயல்படக்கூடிய சூழலை உருவாக்குதல் என்ற நோக்கத்தைக் கொண்டு செயல்படுகின்றது.

# குழந்தைகளுக்கான கிராமசபை அமையும் முறை

குழந்தைகளுக்கான கிராமசபையின் நாள் அரசாங்கத்தால் அறிவிக்கப்பட வேண்டும்.
ஒரு வருடத்திற்கு நான்கு முறை நடைபெற வேண்டும்.
பெரியவர்களின் கிராமசபை நடைபெறும் நாட்கள் தவிர மற்ற நாட்களில் நடைபெற வேண்டும். குழந்தைகள் உரிமையை இந்தியா ஏற்றுக்கொண்ட நாளான டிசம்பர் 11 அன்று இக்கூட்டம் நடைபெற வேண்டும்.

**பங்கேற்பாளர்கள்:-**

கிராமம் / வார்டிலுள்ள அனைத்து குழந்தைகளும் பங்கேற்க வேண்டும்.
18 வயதிற்கு உட்பட்ட அனைத்து குழந்தைகளும் பங்கேற்க வேண்டும்.
எந்தவிதமான வேறுபாடுமின்றி கிராமத்தில் உள்ள அனைத்துக் குழந்தைகளும் பங்கேற்க வேண்டும்.
அந்த கிராம சபையில் குழந்தைகள் பஞ்சாயத்துக் குழு உருவாக்கப்பட வேண்டும்.
குழந்தைகள் கிராமசபையிலிருந்து கிராமப் பஞ்சாயத்திற்கு தேர்ந்தெடுக்கப்படும் பிரதிநிதிகளின் தேர்தல் ஜனநாயக முறையில் நடைபெற வேண்டும்.
அந்த தேர்தலை பஞ்சாயத்துத் தலைவர் நடத்துவார்.
குழந்தைகள் கிராமசபைக் கூட்டங்களில் பெரியவர்கள் மற்றும் பஞ்சாயத்துத் தலைவர்கள் பங்கு பெறுவார்கள்.
குழந்தைகள் நடத்தும் கிராமசபைக் கூட்டத்தில் பெரியவர்கள், குழந்தைகள் எடுக்கும் தீர்மானங்களை அறிந்து கொண்டு செயல்படுத்துமாறு கேட்டுக் கொள்ளப்படுவார்கள்.
குழந்தை தொழிலாளர், சிறப்புக் குழந்தைகள் ஆகிய அனைவரும் கலந்து கொள்ள வேண்டும். இது போன்ற பல்வேறு சூழ்நிலையில் இருக்கும் பின் தங்கியக் குழந்தைகளின் பங்கேற்பை குழந்தைகள் பஞ்சாயத்தில் மற்றும் குழந்தைகளின் கிராமசபையில் உறுதி செய்திட வேண்டும்.

**பெரியவர்களின் கிராம சபையில் குழந்தைகளின் பங்கேற்பு :**

நம் கோரிக்கைகளைக் குறித்து பெரியவர்களின் கிராமசபையில் விளக்க
குழந்தைகளுக்கான திட்டங்களை அறிவதற்கு
குழந்தைகள் பெரியோர்களின் கூட்டத்தில் பங்கேற்க வேண்டும்.

**குழந்தைகள் பஞ்சாயத்து :**

குழந்தைகள் கிராமசபையை வழி நடத்த வேண்டும்.
குழந்தைகள் கிராமசபையில் எடுக்கப்படும் தீர்மானங்களை சமூகத்திற்கும் பெரியவர்கள் கிராமசபைக்கும் கொண்டு செல்பவர்களாக இருக்க வேண்டும்.
18வயதில் போட்டியிட்ட ஒருவரின் பதவிக்காலம் (இரண்டு ஆண்டு காலம்)
ஓராண்டில் நிறைவேறினால் அந்தப் பதவிக்காலத்தை நிறைவேற்ற இடைத் தேர்தல் நடத்தப்படும்
ஒருவர் 18 வயது முடியும் வரை எத்தனை முறை வேண்டுமானாலும் போட்டியிடலாம்
12 முதல் 18 வயது வரை குழந்தைகள் கிராம பஞ்சாயத்து பிரதிநிதிகள் ஆவார்கள்.

**எடுத்துக்காட்டு:-**

ஒரு கிராமத்தில் 300 குழந்தைகள் இருந்தால் அவர்கள் அனைவரும் கிராம சபை உறுப்பினர்கள் ஆவார்கள். ஆனால் பலதரப்பட்ட குழந்தைகளில் ஒவ்வொரு பிரிவிலிருந்தும் ஒருவர் தேர்ந்தெடுக்கப்படுவார்கள். அவர்கள் குழந்தைகள் கிராமப் பஞ்சாயத்து உறுப்பினர்கள் ஆவார்கள். அவர்களின் 10 குழந்தைகள் இருந்தால் அவர்களிலிருந்து 5 குழந்தைகள் தலைவர், துணைத் தலைவர், செயலாளர், துணைச்செயலாளர், பொருளாளர் ஆகியோர் பஞ்சாயத்து நிர்வாகிகள் ஆவார்கள்.

# குழந்தைகள் நகர சபை

குழந்தைகள் நகரசபை என்ற ஆணையை அரசு அறிவிக்க வேண்டும்!

குழந்தைகளின் நகரசபைக் கூட்டம் வருடத்திற்கு நான்கு முறை நடக்க வேண்டும்.

(அவை ஜனவரி24ம் நாள் தேசிய பெண் குழந்தைகள் தினம், ஏப்ரல் 30ம் நாள் குழந்தை உழைப்பு எதிர்ப்பு தினம்,ஆகஸ்ட் 15, நவம்பர் 14ம் நாள் குழந்தைகள் தினம் குறிப்பாக இந்த தினத்தை ஒட்டிய வாரத்தின் பள்ளி விடுமுறை நாட்களில்)

பெரியவர்களுக்கு நடக்கும் நகரசபைக் கூட்டத்தில் குழந்தைகள் நகரசபை பிரதிநிதிகள் பங்கேற்க வேண்டும்.

குழந்தைகள் நகரசபையைக் குழந்தைப் பிரதிநிதிகள் வழி நடத்த வேண்டும். (குழந்தை தொழிலாளர்கள் 5+5)

குழந்தைகள் நகரசபையில் எடுக்கும் தீர்மானங்களைப் பெரியவர்கள் நகரசபைக்கும் சமூகத்திற்கும் தெரியப்படுத்த வேண்டும்.

நகர்ப்புற வார்டு சபை பகுதிகளில் உள்ள 8 முதல் 18 வயதிற்குட்பட்ட குழந்தைகள் அனைவரும் இந்த குழந்தைகள் வார்டு சபைக் கூட்டங்களில் பங்கேற்க வேண்டும்.

குழந்தைகள் நகர்புற வார்டு சபைகளிலிருந்து 10 குழந்தைகள் ( 5ஆண், 5 பெண்) பிரதிநிதிகளில் (நிர்வாகக் குழுக்கள்) ஜனநாயக அடிப்படையில் உருவாக்கப்பட வேண்டும் இவர்களின் வயது 12 முதல் 18 வயது இருக்க வேண்டும்.

குழந்தைகள் நிர்வாகக் குழுவில் ஆண், பெண் குழந்தைகள் எண்ணிக்கையில் சரிசமமாக இருக்க வேண்டும் பெண் குழந்தைகளுக்கு 50% இட ஒதுக்கீடு இந்தக் குழந்தைப் பிரதிநிதிகள் சமூகத்தின் நலிந்த பிரிவினர் இடம் பெற வேண்டும். (உதாரணம் : தலித், ஆதிவாசி, ஊனமுற்றோர், பெண் குழந்தைகள், மீனவர், சிறுபான்மையினர்)

---

*காற்று மாமா காற்று மாமா கருணை செய்குவீர்*
*ஏற்றி வந்த ஜோதி என்னை ஏன் அணைக்கிறீர்?*
*சின்னஞ்சிறு குடிசை இது சிறிது நேரம் நான்*
*பொன்னிறத்து சுடரினாலே பொழியச் செய்குவேன்*
*ஏழைச் சிறுவன் என்னை நம்பி பாடம் படிக்கிறான்*
*ஏழும் மூணும் பத்து என்று எழுத்துக் கூட்டுறான்*
*காய்ச்சும் கஞ்சி குடிக்க வெளிச்சம் காட்ட வேண்டாமோ*
*ஆச்சு இதோ ஆச்சு என்னை அணைத்து விடாதே*

*– கிருஷ்ணன் நம்பி*

தீக்கதிர்
19-8-2010
மதுரை

## மதுரை 'சீடு' நிறுவனத்தில் சுதந்திரதினக் கருத்தரங்கு



மதுரை, ஆக.18-

சுதந்திர தினவிழாவையொட்டி மதுரை சீடு நிறுவனத்தின் சார்பில் இன்றைய சுதந்திரமும், இளைஞர்களும் என்ற தலைப்பில் கருத்தரங்கமும், கலந்துரையாடலும் நடைபெற்றது.

மதுரை கரும்பாலையில் உள்ள கனவுகள் அரங்கத்தில் நடைபெற்ற இந்நிகழ்வில் எழுத்தாளர் ப. கவிதா குமார் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார். நாட்டு நடப்புகளை இளைஞர்கள் அறிந்து கொள்ளுதல், உரிமைகளுக்காக போராடுதல், அரசு கல்விக்கு வழங்கும் வாய்ப்புகளைப் பயன்படுத்துதல், சமூக வளர்ச்சியில் இளைஞர்கள் பங்கெடுத்தல் போன்றவற்றை அவர் குறிப்பிட்டுப் பேசினார். மாணவ, மாணவியர் எழுப்பிய கேள்விகளுக்கு பதில் அளிக்கப்பட்டது.

நிகழ்வினை அமைப்பின் நிர்வாக அறங்காவலர் கார்த்திக் பாரதி, இயக்குநர் மன்சூர் அலி ஆகியோர் ஏற்பாடு செய்திருந்தனர். சி. அருண்குமார் நன்றி கூறினார்.

செங்கல் சுமந்து
சாலை கடந்த
ஏழைச் சிறுவன்
சுவர் சுமந்த எழுத்துகளைப்
படித்து விட்டு சிரித்தான்
இளமையில் கல்.....

– கபிலன்

**யுத்த கால**
**இரவொன்றின் நெருக்குதல்**
**எங்கள் குழந்தைகளை**
**வளர்ந்தவர் குழந்தைகளை**
**தும்பியின் இறக்கையைப் பிய்த்து எறிவது**
**தடியையும் பொல்லையும்**
**துப்பாக்கியாக்கி**
**எதிரியாய் நினைத்து நண்பனைக்**
**கொல்வதும்**
**எமது சிறுவர் விளையாட்டானது**
**யுத்த கால இரவுகளின் நெருக்குதலில்**
**எங்கள் குழந்தைகள்**
**வளர்ந்தவர் ஆயினர்**

**– சிவரமணி....**

**மெரீனா, உயரே விமானம்**
**குழந்தை டாட்டா காட்டுகிறது**
**பார்க்காமலேயே!**

# பூவைப் போன்றது குழந்தை!

*பூவைப் போன்றது பூவேதான்*
*பூவும் குழந்தையும் ஒன்றே தான்*
*குழந்தை என்றால் குழந்தைதான்*
*குழந்தை போன்றெதுவும் இல்லைதான்!*
*கள்ளம் இல்லா உள்ளம் தான்*
*கடவுள் வாழும் இல்லம் தான்*
*பிள்ளை மனமும் வெள்ளைதான்*
*பேசும் தெய்வம் பிள்ளைதான்!*
*அசையும் குழந்தை மழலைதான்*
*அமுதம் ஊறும் குழலே தான்*
*இசையில் சிறந்தது யாழேதான்*
*என்பார் செவிகள் பாழேதான்!*
*நடக்கும் குழந்தையொரு அன்னம்தான்*
*நடந்தால் மகிழ்வாள் அன்னைதான்*
*சிரிக்கும் குழந்தை கன்னம் தான்*
*சின்னத் தங்கக் கிண்ணம் தான்*

*– வெ. சத்தியசீலன்*












கோயிலுக்குப் பக்கத்தில் கார்துடைக்கக் காத்திருப்பாய்
கூட்டமுள்ள ஓட்டல்களில் சாப்பிட்டவுடன் பிளேட்டெடுப்பாய்
பாயின்றிப் படுத்திருப்பாய், ப்ளாட்பாரத்தில் குளிப்பாய்
பட்டறையில் வெட்டிரும்பால் பகலிரவாய்த் தட்டிடுவாய்
சாயங்கால சமுத்திரத்தின் அருகில் சுண்டல் விற்பாய்
சந்துகளில் இருட்டில் பெண்களுக்காய் ஆள் பிடிப்பாய்
வாய்மொழியின் வார்த்தைகளில் வயதை மீறிடுவாய்
வழியெல்லாம் கிடக்கின்ற பிளாஸ்டிகை பொறுக்கிடுவாய்

கஞ்சா அடிப்பாய் கட்டடத்தில் கல்லுடைப்பாய்
காரடியில் படுத்திருந்து கறுப்பாய் எழுந்திருப்பாய்
மேஜை துடைப்பாய் மேட்டினியில் இடிபடுவாய்
மெதுவாக என்னிடத்தில் கறுப்பிலே சீட்டுவிற்பாய்
கூஜா எடுத்துபோய் குடி தண்ணீர் கொணர்வாய்
கூட்டத்தில் கரைந்து பாக்கெட்டைக் கத்தரிப்பாய்
ராஜாவே உனக்கென்றே நாங்கள் இவ்வருஷம்
ராஜ்யம் முழுவதுமே விழாவெடுக்கப் போகின்றோம்.

திரைப்படங்கள் எடுப்போம், தின்பண்டம் தந்திடுவோம்.
தீவிரமாய் உன்நிலையை உயர்த்துவது பற்றி
வரைபடங்கள் வரைந்து, வாதாடி புகைபிடித்து
வருங்காலக் கனவுகளை வண்ணங்களாய்த் தருவோம்
குறைப்பட்டுக் கொள்ளாதே கொஞ்சநாள் பொறுத்திரு
கூட்டங்கள் கூட்டி குளிர்சாதன அறைக்குள்
சிறைப்பட்டுச் சிந்தித்து சீக்கிரமே முடிவெடுப்போம்
சில்லறையாக இல்லை, போய் விட்டு அப்புறம் வா

சுஜாதா


# தூரிகைகளின் தோரணம்




சிவமணிகண்ணன்
வேர்கள் அரங்கம்



ஞா.மாட்டின ஜினோ












விக்னேஸ்வரன்

# குறுக்கெழுத்துப் புதிர்



**இடமிருந்து வலம் :**

1. கர்மவீரர் என்று போற்றபடுபவர் (5)
4. முருகப் பெருமானின் அறுபடை வீடுகளில் ஒன்று (3)
6. இடிசப்தம் கேட்பதற்கு முன் நம் கண்களுக்குத் தெரிவது (4)
7. வரிசை-வேறு சொல் (2)
8. சுவாமிக்கு அலங்காரம்செய்யும் போது போட்டு மறைப்பார்கள் (2)
9. காடு-வேறு சொல் (3)
11. ------- உடையான் படைக்கு அஞ்சான் (3)
12. பரம்பரையைக் குறிக்கும் சொல் (4)
14. இந்தியாவின் இரும்பு மனிதர் (9)
17. பாலைவனக் கப்பல் (5)
20. -------- சுட்டாலும் வெண்மை தரும் (3)
22. குரங்கு - வேறு சொல் (3)
24. ---------- மேல் பூனை (3)

**மேலிருந்து கீழ் :**

1. இந்தியாவின் தந்தை என்று அழைக்கப்படுபவர் (4)
2. பாண்டியமன்னர்களின் தலைநகர் (3)
3. வீடு காற்றோட்டமுள்ளதாய் இருக்க இது அவசியம் (4)
5. ஆங்கிலேயர் காலத்தில் பிரபுக்களை இப்படித்தான் அழைப்பார்கள் (2)
10. முக்கனிகளில் ஒன்று (5)
13. மாநிலத்தின் வரவு - செலவு கணக்குகள் தாக்கல் செய்யப்படும் இடம்
14. கலர்ஸ் இதன் தமிழ் அர்த்தம்
15. மகாபாரதத் போரில் வெற்றி கொண்டவர் (5)
16. முழு நிலவின் வடிவம் (4)
17. அடுத்த நாட்டு ரகசியங்களை தெரிந்து வருபவன் (4)
18. கோபுரம் - ஆங்கிலத்தில் (3)
19. பெண்கள் காதில் அணியும் அணிகலன் (4)
21. தண்ணீர் சுமக்கப் பயன்படுவது (3)
23. இது போனால் சொல் போய்விடும் (2)

**விடைகள்:**

இடமிருந்த வலம் : 1. காமராஜர் 4. பழனி 6. மின்னல் 7. அணி 8. திரை 9. வனம் 11. தம்பி 12. வம்சம் 14. வல்லப்பாய் பட்டேல் 17. ஒட்டகம் 20. சங்கு 22. மந்தி 24. மதில்

மேலிருந்து கீழ் : 1. காந்திஜி 2. மதுரை 3. ஜன்னல் 5.துரை 10. மாம்பழம் 13. சட்டசபை 14. வண்ணங்கள் 15. பாண்டவர் 16. வட்டம் 17. ஒற்றன் 18. டவர் 19. கம்மல் 21. குடம் 23. பல்

# மதுரை சீடு–ன் குழந்தைகளுக்கான நிகழ்ச்சிகள்

**சிறப்பு ஆங்கில வகுப்புகள்:**

2.8.10 அன்று விக்டோரியா ஆங்கில வகுப்பு நடத்தினார். 9ஆம் வகுப்பு குழுந்தைகள் பயனடைந்தனர்.

**பயிற்சிகள் :-**

| நாள் | அரங்கம் | கருத்தாளர் | பயிற்சி |
|---|---|---|---|
| 8.8.10 | வாண்டுகள் | ராதாகிருஷ்ணன் | பாடல் |
| | வேர்கள் | மாரியம்மாள் | கைவினை, பொருள் பயிற்சி |
| | கனவுகள் | ராஜ்குமார் | பினாயில், பிளீச்சிங் பவுடர் தயாரிப்பு |

பினாயில், பிளீச்சிங் பவுடர் தயாரித்தவற்றை அவரவர் வீட்டிற்கு கொண்டு சென்றனர். குழந்தைகளிடையே சுயமாக திறன் வளர்க்கும் போக்கை மதுரை சீடு இந்நிகழ்வுகளின் மூலம் வலியுறுத்துகிறது.

**சுற்றுலாக்கள் :-**

22.8.10:– குட்லாம்பட்டி ஒருநாள் சுற்றுலாவில் 5 முதல் 12 ஆம் வகுப்பு வரை உள்ள குழந்தைகள் 60 பேர் பங்கேற்றனர். இந்நிகழ்விற்கு குழந்தைகள் ஒருங்கிணைப்பாளர் மோகன் பொறுப்பேற்றிருந்தார்.

01.9.10 :– குழந்தைகள் கிருஷ்ணன் கோவில் மற்றும் சூழலியல் பூங்காவிற்கு சென்று மகிழந்தனர்.

**புதுயுகம் இதழ்:-**

11.8.2010 செங்குந்தர் பள்ளி ஆறாம் வகுப்பு மாணவர்களுக்கு புதுயுகம் இதழ்கள் வழங்கப்பட்டன.

13.8.10 ஜெயகோபால் கரோடியா பத்தாம் வகுப்பு மாணவர்களுக்கு புதுயுகம் இதழ்கள் வழங்கப்பட்டன

**கருத்தரங்கு**

| தேதி | பொருள் | அரங்கம் | கருத்தாளர் |
|---|---|---|---|
| 28.8.10 | திரைப்படரசனை | வாண்டுகள்<br>வேர்கள்<br>கனவுகள் | கார்த்திக்பாரதி |

இந்நிகழ்வில் திரைப்படத்தை காணும் முறை, திரைமொழி, கதாபாத்திர படைப்பு, கருத்தியல் போன்றன விவரிக்கப்பட்டன.

**முகாம் : -**

குழந்தைகளுகாக மதுரை சீடு ஆண்டுதோறும் நடத்தும் காலாண்டு விடுமுறை முகாம் 25.9.10 முதல் 30.10.10 வரை ஆறுநாட்கள் நடந்தன. தினசரி காலை 10 மணி முதல் 1 மணி வரை நடத்தப்பட்ட இம்முகாமில் இதழியல், கவிதை, பேச்சு, வாசிப்பு, இலக்கிய ரசனை, திரைப்பட ரசனை என்ற தலைப்புகளில் அடிப்படை பயிற்சிகள் அளிக்கப்பட்டன. வார்த்தை விளையாட்டு, வாக்கியங்கள் அமைக்கும் முறை கவிதை மற்றும் கதை எழுதும் முயற்சிகள் போன்றவை நடைபெற்றன 5ஆம் வகுப்பு மற்றும் 9ஆம் வகுப்பு வரை உள்ள குழந்தைகள் பங்கேற்றனர். குழந்தைகளை மையப்படுத்தி வந்த கவிதைகள், கதைகள் அறிமுகப்படுத்தப்பட்டன. இதழியல் அனுபவத்திற்காக குழந்தைகள் தீக்கதிர் செய்தித்தாள் அச்சுக்கூடத்திற்கு அழைத்து செல்லப்பட்டனர். பேச்சுகலை வகுப்புகளை சேதுபதி பள்ளி மாணவர் ராஜ்குமார் மற்றும் சுதர்சன் வழிநடத்தினர் திரைப்பட ரசனைக்காக **Where**

**is my Friends's home?** திரைப்படம் திரையிடப்பட்டு விவாதம் நடைபெற்றது. தினசரி பயிற்சிகளில் பங்கேற்றவர்களுக்கு தேநீரும், சிற்றுண்டியும், வழங்கப்பட்டன. முகாமை அறங்காவலர் கார்த்திக்பாரதி, மற்றும் இயக்குநர். மன்சூர்அலி ஒருங்கிணைத்தனர்.

| நாள் | நிகழ்வுகள் | பயிற்றுநர் |
|---|---|---|
| 25.9.10 | தீக்கதிர் நாளிதழ் அச்சுக்கூடம் பார்வையிடல் | மோகன்,மாரிமுத்து |
| 26.9.10 | கவிதைப் பயிற்சி – வாசித்தல் – எழுதுதல்<br>ஆனந்த விகடன் சொல்வனம் விவாதம். | கார்த்திக்பாரதி |
| 27.9.10 | பேச்சுக்கலை – பயிற்சி – | ராஜ்குமார், சுதர்ஸன் |
| 28.9.10<br>29.9.10 | வாசிப்பு பயிற்சி – பாரதியார், பாரதிதாசன், பாடல்கள்<br>திரைப்படரசனை **Where is my Friend's Home?**<br>திரையிடல் விவாதம் | கார்த்திக் பாரதி |
| 30.9.10 | இலக்கியரசனை – சிறுகதை வாசிப்பு<br>இமையத்தின் நெல்சோறு<br>சிறுகதை வாசிப்பும், விவாதமும். | கார்த்திக் பாரதி |

## மதுரை சீடு–ன் இளைஞர்களுக்கான நிகழ்ச்சிகள்

**தலைமைத்துவ பயிற்சி**

| | | | | |
|---|---|---|---|---|
| முதற்குழு | 17 பேர் | 2.8.10 முதல்<br>9.8.10 வரை | செந்தமிழ் நூலகம் | அறிவுத் திருக்கோயில் மதுரை மனவளக்கலை மன்றம் பேரா.விமலா மற்றும் ரமணி |
| இரண்டாம் குழு | 17 பேர் | 10.8.10 முதல்<br>16.8.10 வரை | | |

தலைமைத்துவ பயிற்சிகளின் கீழ் யோகம் அடிப்படை சான்றிதழ் பயிற்சி நடைபெற்றது. பயிற்சி முகாமில் எளிய உடற்பயிற்சி, மூச்சுப்பயிற்சி, காயகல்ப பயிற்சி, தியானம், உடல்நலம் பேணல், பாடல் முதலியன இளைஞர்களுக்கு கற்றுத் தரப்பட்டன. அனைவருக்கும் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

**இளைஞர்களுக்கான ஆங்கில வகுப்புகள் :-**

ஆகஸ்ட் 21 மற்றும் செப்டம்பர் 11,18 ஆகிய தேதிகளில் **CM** மையம் நடத்திய ஆங்கில பயிற்சி வகுப்புகளில் இளைஞர்கள் பங்கேற்றனர்.

**மதுரை சீடு இளைஞர்கள் நடத்திய பயிற்சி வகுப்புகள்:-**

காலாண்டு தேர்வு நடைபெற்ற காலங்களில் 24 இளைஞர்கள் 14.9.10 லிருந்து 29.9.2010 வரை குழந்தைகளுக்கு சிறப்பு வகுப்புகள் எடுத்து உதவினர்.

**அரசுத் தேர்வுகளில் பங்கேற்பு:-**

தமிழக அரசு காவல்துறை இரண்டாம்நிலை காவலர் தேர்வினை 8.8.10 அன்று தொண்டர்கள் மாரிமுத்து, சுரேஷ்ராஜன் ராமச்சந்திரன், முருகபாண்டி, சௌந்திரபாண்டி, ராம்குமார் ஆகியோர் எழுதினர்

**பார்வையிடல்கள் :-**

13,14.8.10 இளைஞர் சரவணக்குமார் கல்லூரியிலிருந்து ஊட்டி, கோயம்புத்தூர் தொழிற்சாலைகளை சென்று பார்வையிட்டார்.

4.9.10 முதல் 7.9.10 :-

இளைஞர் மணிகண்டன் , பெங்களூர், மைசூர், ஒகேனக்கல்,பகுதிகளுக்கு சுற்றுலா மற்றும் தொழிற்சாலை பார்வையிடல்களுக்கு சென்றார்.

26.9.10 முதல் 30.9.10

இளைஞர் மருதுபாண்டி ஓசூர், பெங்களூர், மைசூர், ஊட்டி, பகுதிகளுக்கு சுற்றுலா மற்றும் தொழிற்சாலை பார்வையிடல்களுக்கு சென்றார்.

**பணிவாய்ப்புகள் :-**

21.8.10 அன்று தொண்டர் அஷ்டலெட்சுமி வடமலையானில் ஆறுமாத மருத்துவ தொழிற்பயிற்சியில் சேர ஊக்குவிக்கப்பட்டு சேர்ந்தார்.

**கல்லூரி சேர்க்கை :-**

30/8/10 – சென்னையில் நடைபெற்ற மாநில பி.எட். கவுன்சிலிங்–ல் சரண்யா கலந்து கொண்டனர். தூத்துக்குடி அன்னைமரியாள் கல்லூரியில் இடம் கிடைத்தது.

**ஓட்டுநர் உரிமம் :-**

9/910 – மோகன், மகுடபதி ஆகியோர் இரண்டு சக்கர ஓட்டுநர் உரிமம் பெற்றனர்.

**கருத்தரங்கம் :-**

17/8/10 சுதந்திரமும் இன்றைய இளைஞர்களும் என்ற பொருளில் எழுத்தாளர் கவிதாகுமார் உரை நிகழ்த்தினார். 30 இளைஞர்கள் பங்கேற்று பயனடைந்தனர். இன்றைய சூழலில் இளைஞர்கள் ஏற்க வேண்டிய கடமைகளையும், அவர்களின் உரிமைகளையும் சுட்டி காட்டும் நிகழ்வாக இது அமைந்தது.

**குழந்தைகள் மற்றும் இளைஞர்களுக்கான நிகழ்ச்சிகள் :-**

**அன்னை மருத்துவ மன்றம் :-**

7.8.10 அன்று உணவு சுகாதாரம் என்ற தலைப்பில் கருத்தாளர். ராதாகிருஷ்ணன் நிகழ்வு ஒன்றை எளிதமைத்தார். குழந்தைகளும், இளைஞர்களும் பங்குகொண்டு பயனடைந்தனர்.

**விளையாட்டு மன்றம் :-**

15.8.2010 - 29.8.2010 :- கனவுகள் அரங்கத்தில் உள்ளரங்க விளையாட்டுகள் நடந்தன. விருப்பம் உள்ள குழந்தைகள் பங்கேற்று மகிழ்ந்தனர்.

**வான்முகில் கலைமன்றம் :-**

18/8/10 – மதுரை கலை, கலாச்சாரம் என்ற பொருளில் கலைநிகழ்வுகள் நடத்தப்பட்டன. இந்திய பாரம்பரிய உணவுகள் நாட்டுப்புற நடனங்கள், அலங்காரங்கள் போன்றவை வருகை தந்த விருந்தினர்களையும், பங்குபெறச் செய்து அற்புதமான நிகழ்வாக இது நடத்தப்பட்டது.

29.8.10 – இளைஞர்களுக்காக ராவணன் திரைப்படம் காணுதலும், விமர்சனமும் நடத்தப்பட்டது.

5.9.10 – இளைஞர்களுக்காக மதராசப்பட்டினம் திரைப்படம் காணுதலும், விமர்சனமும் நடைபெற்றது.

12.9.10 – **The Kid** திரைப்படம் திரையிடலும் விமர்சனமும் நடைபெற்றது.

**காலாண்டு விடுமுறை சிறப்பு திரையிடல்கள் :-**



26.9.10 **Monsters. Inc**
27.9.10 பெரியார்
28.9.10 **Mr Bean's Holiday**
29.9.10 **The Great Dictator**
30.9.10 **Ice Age**

**உணவுத்திருவிழா :-**

24.9.10. அன்று உணவுத்திருவிழா குழந்தைகளாலும், இளைஞர்களாலும் கரும்பாலை கிழக்குத் தெருவில் கொண்டாடப்பட்டது. முதல் வகுப்பு முதல் பன்னிரெண்டாம் வகுப்பு வரையிலும் கல்லூரி, இளைஞர்கள், பணியாளர்கள் சார்பாகவும் 14 ஸ்டால்கள் வைக்கப்பட்டிருந்தன.

| வகுப்பு | உணவு வகை | தொண்டர் பொறுப்பாளர்கள் |
|---|---|---|
| I | கலர்மிட்டாய் | (அழகிரி) |
| II | கிழங்கு, சுண்டல் | (சிவகுரு) |
| III | பாப்கார்ன் | (பைசர்கான்) |
| IV | பிரட்ரோஸ்ட் | (மாரிமுத்து, அஷ்டலெட்சுமி) |
| V | டில்லி அப்பளம் | (முத்துமாரி) |
| VI | காலிஃளவர் பக்கோடா | (நாகலெட்சுமி) |
| VII | பாதாம்பால் | (பாண்டியராஜன்) |
| VIII | பூரிகிழங்கு | (தங்கலெட்சுமி) |
| IX | ஃபுரூட் சாலட் | (முருகபாண்டி) |
| X | வாழைப்பூ வடை | (முத்துப்பாண்டி) |
| XI | தக்காளிசாதம் | (ராமச்சந்திரன், சரவணக்குமார்) |

| | | | |
|---|---|---|---|
| XII | குஸ்கா | (கற்பகஜோதி) | |
| கல்லூரி இளைஞர்கள் | இரத்தபொரியல் | (மணிகண்டன், சுரேஷ்ராஜன்) | |
| பணியாளர்கள் :- | சிக்கன்சூப் | (மன்சூர் அலி) | |

என விதவிதமான தின்பண்டங்கள் தயாரிக்கப்பட்டு விற்கப்பட்டன.



**விற்பனையில் முதலிடம் பெற்றவர்கள் :-**

முதலிடம் 5 ஆம் வகுப்பு
இரண்டாமிடம் 9ஆம் வகுப்பு
மூன்றாமிடம் 7 ஆம் வகுப்பு

**சுவையில் முதலிடம் பெற்றவர்கள் :-**

முதலிடம் குஸ்கா – 12 ஆம் வகுப்பு
இரண்டாமிடம் தக்காளிசாதம் – 11ஆம் வகுப்பு
மூன்றாமிடம் வாழைப்பூ வடை – 10 ஆம் வகுப்பு

ஒவ்வொரு குழுவிற்கும் ரூ. 50 மதுரை சீடு சார்பாக முதலீடாக தரப்பட்டது. இலாபமாக மொத்தம் ரூ.532.50 ஈட்டப்பட்டது. இலாபத்தொகையை தீபாவளி கொண்டாட்டத்திற்காக மதுரை சீடுக்கு குழந்தைகள் வழங்கினர் சமையல் திறன், விற்பனைத்திறன், திட்டமிடுதல், குழு மனப்பான்மை, பணத்தை கையாளுதல் முதலியவற்றை குழந்தைகள் கற்றுக் கொண்டனர். ஆண்டுதோறும் இவ்விழா மெருகேருவதற்கு கரும்பாலை பகுதி பொது மக்களின் ஆதரவும் ஒரு காரணம் என்றால் அது மிகையாகாது. இந்நிகழ்வினை நிர்வாக அறங்காவலர் கார்த்திக்பாரதி ஒருங்கிணைத்தார்.

**ஆகாயகங்கை சமூகஅறிவியல் மன்றம் :-**

1.9.10 - 5.9.10 :- சமூகஅறிவியல், சம்பந்தமாக பொதுஅறிவை வளர்க்கும் பொருட்டு புதையல் வேட்டை நிகழ்ச்சி நடைபெற்றது. இந்நிகழ்வினை முருகபாண்டி எளிதமைத்தார்.

11.9.10 :- குழந்தைகளுக்கு விநாயகர் பொம்மைகள் செய்யும் போட்டி நடத்தப்பட்டு பரிசுகள் வழங்கப்பட்டன. அனைவருக்கும் பொறி, சுண்டல் வழங்கப்பட்டது.

**கொண்டாட்டங்கள் :-**

9.9.10 – ரம்ஜான் பெருநாள் கொண்டாடப்பட்டது. ரம்ஜான் குறித்து கேள்விகள் கேட்கப்பட்டு பரிசுகள் வழங்கப்பட்டன கேக் வெட்டப்பட்டு பரிசுகள் தரப்பட்டன. வாழ்த்து செய்தியினை முஸ்லீம் குழந்தைகளும், இளைஞர்களும் வழங்கினர். மன்சூர் ரம்ஜான் நாளின் நோக்கங்களை பற்றி விவரித்தார். பின்னர் கலைநிகழ்வுகள் நடைபெற்றன.

**செந்தமிழ் நூலகம் :-**

12.9.10 :- நூலக வகுப்பு நடைபெற்றது. குழந்தைகளுக்கான புத்தகங்கள் அறிமுகம் செய்து வைக்கப்பட்டன.

**சிறப்பு நாட்கள் :-**

சுதந்திர தினவிழா:- 15.8.2010 நிகழ்ச்சி அலுவலகம் முன்பு சுதந்திரதினம் கொண்டாடப்பட்டது. நிர்வாக அறங்காவலர் கார்த்திக்பாரதி தலைமையில் இயக்குனர் மன்சூர் தேசிய கொடியேற்றி வைத்து சுதந்திர தின செய்தி வழங்கினார். அனைவருக்கும் அப்பமும், வடையும் வழங்கப்பட்டன மாலையில் கலைநிகழ்ச்சிகள் நடைபெற்றன.

**ஆசிரியர் தினவிழா 4.9.10**

குழந்தைகள் தங்களது ஆசிரியத் தொண்டர்களுக்கு பரிசுகளை வழங்கினர். மதுரை சீடும் தொண்டர்களுக்கு பரிசுகள் வழங்கியது. குழந்தைகள் அழகிய கலை நிகழ்வுகளை வழங்கினர்.

30.8.10 :- தந்தையர் கூட்டம் நடைபெற்றது.

31.8.10 :- அன்னையர் கூட்டம்நடைபெற்றது.

**பணியாளர் பங்கேற்பு :-**

மதுரை, டி.நோபிலி மையத்தில் 26.8.10 அன்று நடைபெற்ற **Fpcp** மாநில பொதுக்குழு கூட்டத்தில் இயக்குநர் மன்சூர் அலி பங்கேற்றார். மன்சூர் குழந்தைகள் பங்கேற்பை எளிதமைக்கும் குழுவின் உறுப்பினராகவும் பொறுப்பேற்றார்.

22.9.10 அன்று நடைபெற்ற **Fpcp** அமைப்பாளர்கள் கூட்டத்தில் நிர்வாக அறங்காவலர் கார்த்திக்பாரதி பங்கேற்றார். அக்கூட்டத்தில் மதுரை மாவட்ட அமைப்பாளராக தேர்வு செய்யப்பட்டார்.

**குழந்தைகள் பங்கேற்பு :-**

சென்னையில் 21,22.8.10 ஆகிய தேதிகளில் நடைபெற்ற **Fcmrp** மாநில நிர்வாகக்குழு கூட்டத்தில் மாநில துணை செயலாளர் மதுரை சீடு முத்துகணேஷ் பங்கேற்றார்.

**இளைஞர்கள் பங்கேற்பு :-**

18.9.110 செந்தூர் ஹோட்டலில் எவிடன்ஸ் நடத்திய மாநில அளவிலான பழங்குடியினர் மீதான உரிமை மீறல்கள் என்ற தலைப்பில் நடந்த கருத்தரங்கில் **P.**மணிகண்டன், சரவணக்குமார், முத்துப்பாண்டி, பாண்டியராஜன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

22.9.10 : **SSC** கம்ப்யூட்டர் நிறுவனம் நடத்திய தேர்வில் கலந்து கொண்டு வெற்றி பெற்ற தொண்டர் முத்துப்பாண்டி கம்ப்யூட்டர் வென்றார்.

**பார்வையிடல்கள் :-**

18.8.10 அன்று அமெரிக்க நண்பர்கள் விக்டோரியா, விக்டர், கிறிஸ்டினா ஆகியோர் வருகை தந்து ஆங்கில வகுப்பு எடுத்திருந்தனர். அவர்களை வழியனுப்பும் விழா நடைபெற்றது.

**நாளிதழ்களில் மதுரைசீடு :-**

18.8.10 அன்று மதுரை சீடு நடத்திய சுதந்திர தின விழா கருத்தரங்கு குறித்த செய்தியினை தீக்கதிர் நாளிதழ் வெளியிட்டு இருந்தது.

இதழ் வெளியீட்டுக் குழு
V.திவ்யபாரதி (XII), A.சர்மிளா (IX) D.விக்னேஷ்வரன்(VIII), A.ராமகிருஷ்ணன் (VII)
C.அருண்குமார் (தொண்டர் பொறுப்பாளர்)

குழந்தைகளின் புதுயுகம் தனிச்சுற்று சிற்றிதழ் வெளியீட்டு முயற்சிக்கு உதவுவோர்
Dr.மெல்லியல் அண்ணாமலை, சென்னை ஆஷா குழுவினர்
திருமிகு.வே.மாரியம்மாள், திருமிகு. அ.ச.கார்த்திக்பாரதி, திருமிகு. க.அன்பரசன்
மு.மன்சூர்அலி மதுரை சீடு நிர்வாகக் குழு

தொடர்புக்கு : புதுயுகம் சிற்றிதழ்
மதுரை சீடு
அர்ஜுன் சண்முகா இல்லம், 439/1, கிழக்குத் தெரு, கரும்பாலை,மதுரை-20.
பேசி : 9894805446, 94425 37670, 0452-2537670
மின்னஞ்சல் : **maduraiseed1999@gmail.com**
வலைதளம் : **www.ashanet.org # seednarpanigal**
**www.madurai-seed.org**